SNS academy
a fingerprint school
*Sincerity, Nobility and Service*

**TERMENAL EXAM - 1**
**TAMIL (II LANG)**

**Class: 8** **Max Marks: 80**
**Date: 20.9.19** **Time: 3 hrs**

**பகுதி – அ (படித்தல்)**

**1. பின்வரும் பத்தியைப் படித்துப் பல்விடை வினாக்களுக்கு விடை தருக.** **5**

பாமரராய் பயம்மிக்கவராய் பான்மை கெட்டு பத்தொன்பதாம் நூற்றாண்டு பாரத மக்கள் பரிதவித்து வாழ்ந்து வந்தனர். கோயிலில் பூசைசெய்வோன் சிலையை விற்ற கதையாய், வாயிலைக் காத்து நிற்போன் வீட்டை விற்ற கதையாய், வணிகம் செய்ய வந்த ஆங்கிலேயர் நம்தாயகத்தை அழிக்கத் தொடங்கினர். இந்நிலையில் கண்ணைக் காப்பது போல் இம்மண்ணைக் காக்க தமிழ்ப் பெண்ணால் முடியும் என்று சாதித்துக் காட்டியவர் வீரமங்கை வேலுநாச்சியார் ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிய முதல் இந்தியப்பெண் வேலுநாச்சியார்தான். கிட்டூர் ராணி சென்னம்மாவுக்கு 45 ஆண்டுகள் முன்பும் ஜான்சிராணிக்கு 77 ஆண்டுகள் முன்பும் போராடி வரலாறு படைத்தாள். எனவே வேலுநாச்சியாரைத் தமிழகத்து ஜான்சிராணி என்று கூறுவதைக் காட்டிலும் ஜான்சிராணியைத்தான் வடநாட்டு வேலுநாச்சியார் என்று கூறவேண்டும்.

**வினாக்கள்**

i. ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிய முதல் இந்தியப்பெண் ______.
அ) ஜான்சிராணி ஆ) சென்னம்மா
இ) வேலுநாச்சியார் ஈ) லட்சுமிபாய்

ii. பத்தொன்பதாம் நூற்றாண்டு பாரத மக்கள் எவ்வாறுஇருந்தனர்?
அ) பாமரராய் ஆ) பாமரராய் விலங்குகளாய்
இ) பரிதவித்து ஈ) பாமரராகவும் பயமிக்கவராகவும்

iii. ஜான்சிராணிக்கு முன்பே போராடியவர்கள்
அ) கிட்டூர்ராணி ஆ) சென்னம்மா, வேலுநாச்சியார்
இ) வேலுநாச்சியார் ஈ) லட்சுமிபாய், வேலுநாச்சியார்

iv. ஜான்சிராணிக்கும் வேலுநாச்சியாருக்கும் இடையே இருந்த கால இடைவெளி
அ) 77 ஆண்டுகள் ஆ) 45 ஆண்டுகள்
இ) 22 ஆண்டுகள் ஈ) 122 ஆண்டுகள்

v. கண்ணைக் காப்பது போல் மண்ணைக் காத்தவர்
அ) இந்தியர் ஆ) ஆங்கிலேயர்
இ) ஜான்சிராணி ஈ) வேலுநாச்சியார்

**2. பின்வரும் பத்தியைப் படித்துப் பல்விடை வினாக்களுக்கு விடை தருக. 5**

உலகிலேயே மிகவும் அற்புதமான, நம்ப முடியாத சாதனை செய்பவர்கள் யார்? எப்போதும் நம்பிக்கை குறையாமல் வாழ்கிறவர்கள் எவரோ, அவர்கள்தாம். மாற்றுத்திறனாளியரிடம் இத்தகைய நம்பிக்கையை அதிகமாகவே காணலாம். அருஞ்சாதனை புரிந்த தாமசு ஆல்வா எடிசன், கெல்ன் கெல்லர், பீத்தோவன், மைக்கேல் பாரடே, சான்சன் முதலானோர் மாற்றுத்திறனாளியரே. தன்னம்பிக்கை ஒன்றனையே இவர்கள் தம் வாழ்வில் குறிக்கோளாகக் கொண்டார்கள். நான்கு வயதில் ஏற்பட்ட நிமோனியா காய்ச்சினால், இனி நடக்கவே முடியாது என மருத்துவரால் கூறப்பட்ட வில்மா ருடால்ப் என்னும் பெண்மணி, தன்னம்பிக்கையையும் விடாமுயற்சியையும் கைவிடவில்லை. இடைவிடாத பயிற்சியும் துணிவும் கொண்டு விளங்கிய வில்மா, பதின்மூன்று வயதில் ஓட்டப்போட்டிகளில் கலந்து கொண்டாள். 1960ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் பங்கு பெற்ற வில்மா ஒரே ஒலிம்பிக் போட்டியில் மூன்று தங்கங்களை வென்ற பெண்மணி எனப் பாராட்டப்பெற்றார். நம்பிக்கைதான் வாழ்வின் உயிர் நாடி. நம்பிக்கை இருந்தால் நம் விதியைக் கூட மாற்றிச் சாதனை படைக்கலாம்.

**வினாக்கள்**

i. மாற்றுத்திறனாளிகளிடம் அதிகமாகக் காணப்படுவது ………..
அ) நம்பிக்கை ஆ) கவலை இ) வேதனை ஈ) மகிழ்ச்சி

ii. வெற்றி பெற எதனைக் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்?
அ) தன்னம்பிக்கை ஆ) முயற்சி இ) சாதனை ஈ) கவலை

iii. ஒலிம்பிக் போட்டி நடைபெற்ற ஆண்டு …………………..
அ) 1960 ஆ) 1860 இ) 1690 ஈ) 1680

iv. வில்மா ருடால்ப் நடக்க இயலாத காரணம் ?
அ) நிமோனியா காய்ச்சல் ஆ) இளம்பிள்ளை வாதம்
இ) கால்முறிவு ஈ) மலேரியா காய்ச்சல்

v. வாழ்வில் எதனைக் கைவிடக்கூடாது?
அ) தன்னம்பிக்கை, விடாமுயற்சி ஆ) நம்பிக்கை
இ) முயற்சி ஈ) உழைப்பு

**3. மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி எழுதுக.** **5**

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு".

ஆடை அவிழும்போது கை தானே சென்று கீழே விழாமல் காப்பது போல நண்பன் துன்பப்படும் போது ஓடி சென்று உதவுவது நட்பு என வள்ளுவர் விளக்கம் தருகிறார். நாம் சந்தோசமாக இருக்கும் நேரம் நண்பர்கள் உடன் இருக்கும் போது மட்டும் தான். எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல் உலகில் இருக்கும் ஒரே உறவு நட்பு மட்டுமே உன் நண்பனைப் பற்றிச்சொல் உன்னை பற்றி சொல்கிறேன். நம்முடைய குணநலன்கள், நடத்தை போன்ற அம்சங்களை நிர்ணயிக்க முக்கிய காரணம் நமது நட்புதான். நல்ல மனைவியை போல நல்ல நண்பன் கிடைப்பதும் இறைவன் கொடுத்த வரம்தான். தாய், தந்தையை விட நன் வாழ்வில் அதிக நேரம் நம்முடன் இருப்பவர்கள்நண்பர்களே! இந்த நவீன யுகத்தில் எல்லாமே விரைவாக நடக்கின்றன ஒவ்வொரு மனிதனும் தான் வாழ்க்கையை ஐம்பது ஆண்டுகள் கழித்துப் பார்த்தால் இதுவரை என்ன பெற்றிருக்கிறோம் என ஆராய்ந்தால் நண்பர்கள் தான் நினைவுக்கு வருவர். தினமும் நாளிதழ்களில் பார்க்கும் பொது பிரபலங்கள் இந்த நிலைக்கு வர காரணமாக நண்பர்களை குறிப்பிடுவார்கள். அதேபோல திருட்டு, கொலை போன்ற பாதக செயல்களில் தனது நண்பர்களுடன் ஈடுபடுவதை பார்க்கின்றோம். ஆகவே நட்பு தான் நம்மை நிர்ணயிக்கின்றது.

## பகுதி – ஆ (எழுதுதல்)

**4.** நீ வாழும் பகுதியில் அஞ்சல்பெட்டி அமைத்துத்தர அஞ்சலகத் தலைமை மேலாளாருக்கு வேண்டுகோள் கடிதம் எழுதுக. 6

**(அல்லது)**

விளையாட்டுப் போட்டியில் முதல் பரிசு பெற்ற நண்பனைப் பாராட்டி மடல் எழுதுக.

**கடிதத்தில் உனது பெயரும், முகவரியும்:** பூரணன்/பூரணி, எண்.3, கம்பர் தெரு, சோமசுந்தரம் குடியிருப்பு, மதுரை எனக் கொள்க.

**5. பின்வரும் பகுதிகளில் ஏதேனும் ஒன்றில் கொடுக்கப் பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக. 8**

i. முன்னுரை - செல்வம் – சேமிப்பும் செலவும் – சேமிப்புகள் – அரசு சேமிப்புத்திட்டங்கள் – அதிக வருமான ஆசை – ஏமாற்றும் தனியார் சேமிப்புத்திட்டங்கள் எச்சரிக்கையுடன் இருத்தல் – வளமான எதிர்காலத்திற்கு வழிவகுத்தல்– முடிவுரை.

ii. முன்னுரை – சாலை விபத்துகள் – வாகனங்களின் பெருக்கம் – விபத்துகள் நிகழக் காரணம் – போக்குவரத்து விதிமுறைகள் – விபத்துகள் ஏற்படாமல் தடுக்கும் முறை – முடிவுரை.

**iii.** முன்னுரை – அறிவியலும் வாழ்க்கையும் – மனித வாழ்க்கைக்கு உயிர் நாடி – அறிவியல் வளர்ச்சிப் பாதை – நன்மை தீமை - முடிவுரை

**பகுதி – இ (இலக்கணம்)**

**6. சான்று தருக. (மூன்று மட்டும்) 3**

i. எச்சம்
   அ) ஆறு ஆ) எட்டு இ) இரண்டு ஈ) மூன்று

ii. சார்பெழுத்து
   அ) அ ஆ) க் இ) கு ஈ) ம்

iii. தனி நிலை
   அ) ஆய்தம் ஆ) உயிர் இ) மெய் ஈ) உயிர்மெய்

iv. அம்மா
   அ) பெயர்ச்சொல் ஆ) வினைச்சொல்
   இ) உரிச்சொல் ஈ) இடைச்சொல்

v. வள்ளி படித்தனள்
   அ) வினையெச்சம் ஆ) முற்றெச்சம்
   இ) பெயரெச்சம் ஈ) வினைமுற்று

**7. நிரப்புக. (மூன்று மட்டும்) 3**

**i.** சார்பெழுத்துகள் ___________ வகைப்படும்.
   அ) ஆறு ஆ) எட்டு இ) பத்து ஈ) மூன்று

ii. மதுரை என்பது ___________ பெயர்.
   அ) பொருட்பெயர் ஆ) இடப்பெயர்
   இ) காலப்பெயர் ஈ) குணப்பெயர்

iii. முற்று பெறாத எஞ்சி நிற்கும் சொல்__________ எனப்படும்.
அ) எச்சம் ஆ) முற்று
இ) வினையெச்சம் ஈ) பெயரெச்சம்

iv. பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்திக் காட்டுவது __________
அ) அடைமொழி ஆ) போலி இ) வேற்றுமை ஈ) உவமை

v. 'கரிகாலன் கல்லணையைக் கட்டினான்' என்பது ________ தொடர்
அ) செய்தித் தொடர் ஆ) உணர்ச்சித் தொடர்
இ) வினாத்தொடர் ஈ) விழைவுத் தொடர்

**8. கூறியவாறு செய்க. (மூன்று மட்டும்) 3**

i. 123 (தமிழெண்ணாக்குக)
அ) க உ ங ஆ) ரு உ கூ இ) க ரு சு ஈ) உ க 0

ii. நான்காம் வேற்றுமை உருபை எழுதுக.
அ) ஐ ஆ) கு இ) அது ஈ) கண்

iii. அண்ணன் ( சார்பெழுத்தைக் காண்க)
அ) அ ஆ) ண் இ) ண ஈ) ன்

iv. நேற்று வருவேன் [கால வழு நீக்குக]
அ) நாளை வருவாள் ஆ) நாளை வந்தேன்
இ) நாளை வருவேன் ஈ) நாளை வருவார்

v. ஆடினான் (தொழில் பெயராக்குக)
அ) ஆடினாள் ஆ) ஆடுதல் இ) அடுதல் ஈ) ஆடினார்

**9. இலக்கணக்குறிப்பு தருக. (மூன்று மட்டும்) 3**

i. ஃ
அ) ஆய்தம் ஆ) உயிர் இ) மெய் ஈ) உயிர்மெய்

ii. அழுதல்
அ) தொழிற்பெயர் ஆ) குணப்பெயர்
இ) வினைச்சொல் ஈ) முதனிலைபெயர்

iii. வந்தான்
அ) வினைமுற்று ஆ) வினையெச்சம்
இ) பெயரெச்சம் ஈ) எச்சம்

iv. ஓரெழுத்து ஒருமொழி
அ) 42 ஆ) 7 இ) 78 ஈ) 50

v. மரங்கள் என்பது
அ) பலர்பால் ஆ) ஒன்றன்பால்
இ) ஆண்பால் ஈ) பலவின்பால்

**10. சரியான சொற்றொடரைத் தேர்ந்து எழுதுக. (மூன்று மட்டும்) 3**

i. அ) தமிழ் இலக்கணம் ஏழு வகைப்படும்
ஆ) தமிழ் இலக்கணம் ஐந்து வகைப்படும்
இ) தமிழ் இலக்கணம் ஆறு வகைப்படும்
ஈ) தமிழ்இலக்கணம் மூன்று வகைப்படும்

ii. அ) வேற்றுமை ஆறு வகைப்படும்
ஆ) வேற்றுமை பதினாறு வகைப்படும்
இ) வேற்றுமை பத்து வகைப்படும்
ஈ) வேற்றுமை எட்டு வகைப்படும்

iii. அ) எழுத்துகளின் பிறப்பு இரண்டு வகைப்படும்
ஆ) எழுத்துகளின் பிறப்பு நான்கு வகைப்படும்
இ) எழுத்துகளின் பிறப்பு மூன்று வகைப்படும்
ஈ) எழுத்துகளின் பிறப்பு ஆறு வகைப்படும்.

iv. அ) சொற்றொடரின் இடையில் முற்றுப்புள்ளி வரும்.
ஆ) சொற்றொடரின் முதலில் முற்றுப்புள்ளி வரும்.
இ) சொற்றொடரின் இறுதியில் முற்றுப்புள்ளி வரும்.
ஈ) சொற்றொடரின்முதலிலும் இறுதியில் முற்றுப்புள்ளி வரும்.

v. அ) பால் நான்கு வகைப்படும்
ஆ) பால் ஆறு வகைப்படும்
இ) பால் ஐந்து வகைப்படும்
ஈ) பால் பத்து வகைப்படும்

**பகுதி – ஈ**

**11. பின்வரும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி: 5**

நலமான உடலுக்கு இரண்டுவேளை சிற்றுண்டியும், ஒருவேளை பேருண்டியும் போதுமானது. காலை உணவைத் தவிர்த்தல் கூடாது. இரவெல்லாம் வெற்றுக் குடலுடன் இருந்த உடலுக்குக் குளிர்ச்சியான உணவு மிகவும் நல்லது. மதிய உணவில் காய்கறிகள், கீரைகள் ஆகியவற்றை அதிக அளவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். அரிசி உணவை அளவாக உண்ண வேண்டும். மிகுதியான காரத்தையும் உப்பையும் தவிர்க்க வேண்டும். சரியான நேரத்திற்கு உணவை உட்கொள்ள வேண்டும். இரவு எளிமையான உணவை எடுத்துக் கொள்ள வேண்டும். இவையே உடல்நலம் பேணும் வழிமுறைகளாகும்.

**வினாக்கள்**

i. இரவு எவ்வகையான உணவை எடுத்துக் கொள்ள வேண்டும்?
ii. எதனைத் தவிர்க்க வேண்டும்?
iii. மதிய உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டியவை எவை?
iv. எவற்றை அளவாக உண்ண வேண்டும்?
v. இப்பத்திக்கேற்ற தலைப்பு தருக.

**12. பின்வரும் செய்யுளைப் படித்துப் பல்விடை வினாக்களுக்கு விடை தருக. 4**

உடலின் உறுதி உடையவரே
உலகில் இன்பம் உடையவராம்
இடமும் பொருளும் நோயாளிக்கு
இனிய வாழ்வு தந்திடுமோ?
சுத்தமுள்ள இடமெங்கும்
சுகமும் உண்டு நீ அதனை
நித்தம் நித்தம் பேணுவையேல்
நீண்ட ஆயுள் பெறுவாயே.

**வினாக்கள்**

i. இப்பாடலின் ஆசிரியர்
அ) கம்பர் ஆ) மருதகாசி
இ) கவிமணி தேசிக விநாயகம் ஈ) பரஞ்சோதி

ii. இப்பாடலில் குறிப்பிடப் பட்டுள்ள கருத்து
அ) அசுத்தம் ஆ) சுத்தம் இ) இன்பம் ஈ) துன்பம்

iii. இடமெங்கும்– பிரித்து எழுதுக.
அ) இட + மெங்கும் ஆ) இடமெ +கும்
இ) இடம் + மெங்கும் ஈ) இடம் + எங்கும்

iv. நித்தம்– பொருள் கூறுக.
அ) நேற்று ஆ) மழை இ) நாள்தோறும் ஈ) மாலை

**13. விடுபட்ட சீர்களை எழுதுக. 2**

i. __________ மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ________ யவர்.

ii. தக்கார் ______ என்பது அவரவர்
_________ காணப் படும்.

**14. எவையேனும் இரண்டு செய்யுள் வினாக்களுக்கு விடை தருக. 8**

i. நோயின் வகைகள், அவற்றைத் தீர்க்கும் வழிகள் பற்றி நீலகேசி கூறுவன யாவை?

ii. தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகள் யாவை?

**iii.** ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை?

**iv.** கோணக்காற்றால் வீடுகள், மரங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் யாவை?

**15. எவையேனும் இரண்டு உரைநடை வினாக்களுக்கு விடை தருக 10**

i. தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் அறிவுரைகள் யாவை?

ii. இன்றைய கல்வியின் நிலை, தமிழ்வழிக் கல்வி பற்றி திரு.வி.க. கூறுவது யாது?

iii. எழுத்துச் சீர்த்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக.

iv. நீர் நிலைகள் குறித்து சியாட்டல் கூறியுள்ளவற்றை எழுதுக.

**16. ஏதேனும் ஒரு தலைப்பில் துணைப்பாடக் கட்டுரை எழுதுக. 7**

i. வெட்டுக்கிளியும் சருகுமானும் விவரிக்க.

ii. மூளையின் வலது, இடது பாகங்களின் செயல்பாடுகள் பற்றித் தொகுத்து எழுதுக.

iii. ஆன்ற குடி ப்பிறத்தல் – விளக்குக.